அரசு உதவி வழக்கு நடத்துநர் தேர்வு

உத்தேச விடைக்குறிப்பு

டிஎன்பிஎஸ்சி வெளியீடு

சென்னை, பிப்.25: நடைபெற்று முடிந்த அரசு உதவி வழக்கு நடத்துநர் (கிரேடு 2) தேர்வுக்கான உத்தேச விடைக்குறிப்புகளை டிஎன்பிஎஸ்சி வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பாக டிஎன்பிஎஸ்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

டிஎன்பிஎஸ்சி சார்பில் குற்ற வழக்கு தொடர்வு துறையில் அரசு உதவி வழக்கு நடத்துநர் (கிரேடு 2) பதவிக்கான முதல்நிலை தேர்வு கடந்த 15ம் தேதி நடந்தது. இந்த தேர்வுக்கான உத்தேச விடைக்குறிப்புகள் தேர்வாணைய இணையதளத்தில் நேற்று வெளியிடப்பட்டுள்ளது. இந்த உத்தேச விடைகளின் மீது முறையீடு செய்ய விரும்பும் தேர்வர்கள் விடைகள் வெளியிடப்பட்ட நாளிலிருந்து 7 நாளுக்குள், அதாவது மார்ச் 3ம் தேதி மாலை 5.45 மணிக்குள் தேர்வாணைய இணையதளத்தில் உள்ள "answer key challenge" என்ற சாளரத்தைப் பயன்படுத்தி முறையீடு செய்யலாம்.

கூடுதல் விவரங்களை தேர்வாணைய இணையதள பக்கத்தில் சென்று தெரிந்துகொள்ளலாம். அஞ்சல் மற்றும் மின்னஞ்சல் முறையீடுகள் ஏற்றுக்கொள்ளப்படாது. இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கன்னிகாபுரம் விளையாட்டு திடல் திறப்பு

▶ திருவிக நகர் சட்டமன்ற தொகுதி கன்னிகாபுரத்தில் ரூ.12.68 கோடியில் கட்டப்பட்டுள்ள கன்னிகாபுரம் விளையாட்டு திடலை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார். அருகில், அமைச்சர் சேகர்பாபு, மேயர் பிரியா, எம்எல்ஏக்கள் தாயகம் கவி, வெற்றியழகன், எபிநேசர், ஜோசப் சாமுவேல், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை செயலாளர் காகர்லா உஷா, சென்னை பெருநகர் வளர்ச்சி குழு உறுப்பினர் செயலர் பிரகாஷ் உள்ளிட்டோர்.

சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதியில்

ரூ.16 கோடியில் 3 முடிவுற்ற திட்டப்பணிகள்

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்

சென்னை, பிப்.25: சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் ரூ.16.13 கோடியில் முடிவுற்ற 3 திட்டப்பணிகளை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்.

சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பேகம் 5வது தெருவில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் மாமன்ற உறுப்பினர் கமலா செழியனின் வார்டு மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.1.10 கோடியில் 2,250 சதுர அடி பரப்பளவு கொண்ட இறகுப் பந்து விளையாட்டு உள்ளரங்க மைதானம் அமைக்கப்பட்டுள்ளது.

ராஜாஜி நகர், கஜபதி தெருவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி, நாடாளுமன்ற மேலவை உறுப்பினர்கள் என்.ஆர்.இளங்கோ, அப்துல்லா, ராஜேஷ்குமார் ஆகியோரின் தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் மாநகராட்சி மூலதன நிதியின் கீழ் ரூ.4.44 கோடி மதிப்பீட்டில் அண்ணல் டாக்டர் அம்பேத்கர் திருமண மாளிகை கட்டப்பட்டுள்ளது. இந்த திருமண மாளிகையானது தரைத் தளம், முதல் தளம், இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளத்துடன் 3,264 சதுர அடி பரப்பளவு கொண்டது. இந்த திருமண மண்டபத்தின் தரைத் தளத்தில் வாகன நிறுத்தம், முதல் தளத்தில் சமையலறை மற்றும் உணவு அருந்தும் கூடம், இரண்டாம் தளத்தில் திருமண மண்டபம், மூன்றாம் தளத்தில் மணமகன், மணமகள் தங்கும் அறைகள், குளியலறை, கழிப்பறை உள்ளிட்ட பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

சிந்தாதிரிப்பேட்டை, சிங்கண்ண தெருவில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி, நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் வில்சன் மேம்பாட்டு நிதி, சிங்கார சென்னை 2.0 மற்றும் மூலதன நிதியின் கீழ் ரூ.10.59 கோடி மதிப்பீட்டில் கலைஞர் திருமண மண்டபம் கட்டப்பட்டுள்ளது. இந்த திருமண மண்டபம் 19,610 சதுர அடி பரப்பளவில் தரைத் தளம், முதல் தளம், இரண்டாம் தளம் மற்றும் மூன்றாம் தளங்களை கொண்டது. இந்த திருமண மண்டபத்தின் தரைத் தளத்தில் வாகனம் நிறுத்துமிடம், முதல் தளத்தில் 150 பேர் அமர்ந்து உணவருந்தும் கூடம், இரண்டாம் தளத்தில் 350 பேர் அமர்ந்து பார்க்கும் வகையில் திருமண மண்டபம், மூன்றாம் தளத்தில் 4 விருந்தினர் அறைகள், திருமண மண்டபத்திற்கு குளிருட்டும் வசதி, மின் தூக்கி மற்றும் கழிப்பறை வசதி உள்ளிட்ட பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

ஆதிகேசவலு தெருவில் உள்ள சென்னை நடுநிலைப் பள்ளியில் மாநகராட்சியின் மூலதன நிதியின் கீழ் ரூ.3.76 கோடி மதிப்பீட்டில் புதிய பள்ளிக் கட்டிடம் கட்டப்படவுள்ளது. இந்த புதிய பள்ளிக் கட்டிடமானது தரைத் தளம் மற்றும் முதல் தளத்துடன் 874.34 சதுர மீட்டர் பரப்பளவு கொண்டது. இந்த பள்ளிக் கட்டிடத்தின் தரைத் தளத்தில் 3 வகுப்பறைகள், தலைமையாசிரியர் அறை, 2 சமையல் அறைகள், 2 வைப்பு அறைகள், கழிவறைகள், முதல் தளத்தில் 6 எண்ணிக்கையிலான வகுப்பறைகள் மற்றும் கழிவறைகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் அமைக்கப்பட உள்ளது.

திருவல்லிக்கேணி பேகம் 5வது தெருவில் ரூ.1.10 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இறகுப்பந்து விளையாட்டு உள்ளரங்க மைதானத்தை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்.

மேலும், ராஜாஜி நகரில் ரூ.4.44 கோடியில் கட்டப்பட்டுள்ள அண்ணல் டாக்டர் அம்பேத்கர் திருமண மாளிகை மற்றும் சிந்தாதிரிப்பேட்டை சிங்கண்ண தெருவில் ரூ.10.59 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் திருமண மண்டபம் ஆகியவற்றை திறந்து வைத்தார்.

சிவராஜபுரத்தைச் சேர்ந்த உடல் நல குறைவினால் பாதிக்கப்பட்ட சண்முகம், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தின் கீழ் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வலது கால் அகற்றப்பட்ட நிலையில், அவருக்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அதிநவீன எடை குறைவான செயற்கை காலை பொருத்தினார். சிந்தாதிரிப்பேட்டை ஆதிகேசவலு தெருவில் ரூ.3.76 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள சென்னை நடுநிலைப் பள்ளியின் புதிய கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சிகளில் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு, மேயர் பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் வில்சன், மாநகராட்சி ஆணையர் குமரகுருபரன், நிலைக் குழுத் தலைவர் பணிகள் சிற்றரசு, ஆளுங்கட்சி துணைத் தலைவர் காமராஜ், மண்டலக்குழுத் தலைவர் மதன்மோகன், வட்டார துணை ஆணையர்கள் கட்டாரவி தேஜா, கவுசிக், மாமன்ற உறுப்பினர்கள் கமலா செழியன், மங்கை ராஜ்குமார் உள்பட மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரூ.10,000 கருணைத்தொகை

நாங்க ஆட்சிக்கு வந்தா வரியை உயர்த்துவோம்

எடப்பாடி 3ம் கட்ட தேர்தல் வாக்குறுதி

சென்னை, பிப்.25: நாங்கள் ஆட்சிக்கு வந்தால் வரிகளை உயர்த்துவோம் என்று அதிமுக மூன்றாம் கட்டத் தேர்தல் வாக்குறுதியில் கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி நேற்று அறிவித்தார். மேலும், ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ.10 ஆயிரம் கருணைத்தொகையும் வழங்கப்படும் என தெரிவித்தார்.

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி ராயப்பேட்டையில் உள்ள அதிமுக தலைமை அலுவலகத்தில் மூன்றாவது கட்ட தேர்தல் அறிவிப்பை வெளியிட்டுச் செய்தியாளர்களைச் சந்தித்தார். அதிமுக சார்பில் அளிக்கப்படும் மூன்றாம் கட்டத் தேர்தல் வாக்குறுதிகள் வருமாறு:

- திமுக ஆட்சியில், கடந்த 5 ஆண்டுகளில் அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசி விஷம் போல் ஏறி மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். அதேபோல், சொத்து வரி, வீட்டு வரி, மின்சார கட்டணம், குடிநீர் வரி போன்ற பல வரிகளும் உயர்த்தப்பட்டுவிட்டது. இதனால், மக்களின் அன்றாடக் குடும்பச் சுமை பன்மடங்கு அதிகரித்துவிட்டது. எனவே, மக்களின் சுமையை குறைக்கும் வகையில், ஒவ்வொரு குடும்பத்திற்கும் கருணைத் தொகையாக ரூ.10,000 வழங்கப்படும்.
- வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து, வேலைக்காக காத்திருக்கும் பட்டதாரிகளுக்கு மாதந்தோறும் ரூ.2,000; +2 வரை படித்து வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ளவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000, உதவித் தொகையாக வழங்கப்படும்.
- மீன்பிடித் தடைக் காலங்களில் மீனவர்களுக்கு, தற்போது வழங்கப்பட்டு வரும் நிவாரணத் தொகை ரூ.8,000ல் இருந்து ரூ.12,000ஆக உயர்த்தி வழங்கப்படும்.
- ஒவ்வொரு ஆண்டும் தைப் பொங்கல் அன்று வழங்கப்பட்டு வரும் பொங்கல் தொகுப்புடன் சேர்த்து ரூ.1,000 வழங்கப்படும்.
- கைத்தறி நெசவாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் இலவச மின்சாரம் 300 யூனிட்டில் இருந்து 450 யூனிட்டாகவும்; விசைத்தறி நெசவாளர்களுக்கு 1,000 யூனிட்டில் இருந்து 1,400 யூனிட்டாகவும் உயர்த்தி வழங்கப்படும்.
- நகரப் பகுதிகளில் நடைபாதை ஓரமாக கடை வைத்திருக்கும் சிறு வியாபாரிகள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய கடன் தள்ளுபடி செய்யப்படும்.

தொடர்ந்து, செய்தியாளர்களிடம் எடப்பாடி பழனிசாமி பேசியதாவது;

அனைத்து குடும்பங்களுக்கும் கருணை அடிப்படையில் ஒருமுறை மட்டும் ரூ.10,000 வழங்கப்படும். நிதித்துறை நிபுணர்கள் மூலமாக எந்தெந்த வகையில் வரியை உயர்த்த முடியுமோ அதை உயர்த்தி நாங்கள் அறிவித்த திட்டங்களுக்கு தேவையான நிதியைப் பெற்றுத் திட்டங்களைச் செயல்படுத்துவோம். படித்துப் பட்டம் பெற்ற இளைஞர்கள் மன உளைச்சல் இல்லாமல் இருக்க முதல் கட்டமாக இந்த உதவித்தொகை வழங்குவோம். உயிருக்கு போராடிக் கொண்டிருப்பவர்களுக்கு வென்டிலேட்டர் வைப்பது போன்று, மக்களுக்கு இந்தக் கருணைத் தொகையை வழங்குகிறோம்.

தேசிய ஜனநாயகக் கூட்டணி ஏற்கனவே அமைக்கப்பட்டது. அதில் அதிமுக சேர்ந்துள்ளது. ஏற்கனவே தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இடம்பெற்றிருந்தவர்களெல்லாம் பாஜ மூலம் இடங்களை பெறுவோம் என்று கூறியுள்ளார்கள்; வேறு ஒன்றும் கிடையாது.

இவ்வாறு அவர் கூறினார்.

தமிழ்நாடு மாநில

தகவல் ஆணையராக அதுல்ய மிஸ்ரா, அபய்குமார் சிங் நியமனம்

அரசு உத்தரவு

சென்னை, பிப். 25: தமிழ்நாடு மாநில தகவல் ஆணையராக ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி அதுல்ய மிஸ்ரா மற்றும் ஓய்வு பெற்ற ஐபிஎஸ் அதிகாரி அபய்குமார் சிங் ஆகியோரை நியமனம் செய்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

▶ அதுல்ய மிஸ்ரா, அபய்குமார் சிங்

இதுகுறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்ட அரசாணையில், தமிழ்நாடு தகவல் ஆணையராக ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி அதுல்ய மிஸ்ரா மற்றும் ஓய்வு பெற்ற ஐபிஎஸ் அதிகாரி அபய்குமார் சிங் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மாநில தகவல் ஆணையத்தின் பணிகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் இந்த நியமனம் செய்யப்பட்டுள்ளது. மேலும் புதிய மாநில தகவல் ஆணையர்கள் விரைவில் பதவியேற்க உள்ளனர். இவர்களின் நிர்வாக அனுபவம் மற்றும் சட்டம்-ஒழுங்கு துறைகளில் பெற்றுள்ள விரிவான பணிச்சூழல் அனுபவம், தகவல் ஆணையத்தின் செயல்திறனை மேம்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழக மீனவர் பிரச்னையில் ஒன்றிய அரசு அலட்சியம்

நடவடிக்கை எடுக்காவிட்டால் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும்

செல்வப்பெருந்தகை எச்சரிக்கை

சென்னை, பிப்.25: தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழகத்தை சேர்ந்த 116 மீனவர்கள் இலங்கை அரசின் காவலில் இருந்து வருகின்றனர். இது குறித்து தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு பலமுறை கடிதம் எழுதியும் கைது செய்யப்பட்ட மீனவர்களும், பறிமுதல் செய்யப்பட்ட படகுகளும் இதுவரை விடுவிக்கப்படவில்லை.

பாஜ அரசின் வெளியுறவுத்துறை தமிழக மீனவர் பிரச்னையில் அலட்சியப்போக்குடன் நடந்து கொண்டு வருகிறது. இத்தகைய ஒன்றிய அரசின் தமிழக மீனவர் விரோதப் போக்கை தமிழக காங்கிரஸ் சார்பாக வன்மையாக கண்டிக்கிறேன். கைது செய்யப்பட்ட மீனவர்களும் பறிமுதல் செய்யப்பட படகுகளையும் உடனடியாக இலங்கை கடற்படை விடுவிக்க ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்கவில்லை எனில் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்பதை எச்சரிக்கிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

தெற்கு இரயில்வே

(கட்டுமான நிறுவனம்) ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

எண்: OHE-CN-DYCEE-25-26-23-238 தேதி: 21-02-2026

மேதகு இந்தியக் குடியரசுத் தலைவரின் சார்பிலும் அவருக்காகவும் துணை தலைமை மின்சார பொறியாளர் / OHE, கட்டுமானம், தெற்கு இரயில்வே, சென்னை எழும்பூர் அவர்கள், பின்வரும் பணிகளுக்காக மின்னணு ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்கிறார்.

பணி பற்றிய விவரம் : தெற்கு இரயில்வேயின் சென்னை கோட்டத்தின் வாலாஜா சாலை (உட்பட) மற்றும் சோளிங்கர் டவுன் (உட்பட) இடையே உத்தேசிக்கப்பட்ட புதிய அகலப்பாதை ஒற்றை தடத்தில் "2 x 25 kV AT ஃபீடிங் சிஸ்டத்திற்கு உகந்த ட்ராக்ஷன் ஓவர்ஹெட் சாதனத்தை (OHE) வடிவமைத்து சப்ளை செய்து நிலைநாட்டி நிறுவுதல்

ஒப்பந்தப்புள்ளி மதிப்பு	₹12,04,35,852.67
ஒப்பப்புள்ளி காப்புறுதி தொகை	₹7,52,200.00
ஒப்பந்தப்புள்ளி மூடப்படும் தேதியும் நேரமும் : 26–03–2026 அன்று 15.00 மணி	

மேலும் விவரங்களுக்கு காண்க இணையதளம் www.ireps.gov.in

துணை தலைமை மின்சார பொறியாளர் / OHE, மின்சார கட்டுமானம் / சென்னை – 8

Central Bank of India சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா

சோத்துப்பாக்கம் கிளை
G S T ரோடு, சோத்துப்பாக்கம், அச்சரப்பாக்கம் வழி, காஞ்சிபுரம் மாவட்டம், Pin-603319 Ph. 044-2752 9206

SARFAESI சட்டம் 2002-ன் கீழ் இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6) / 9(1)-ன் கீழ் அடமானம் வைக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை விற்பனை செய்தல்.

சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா-ல் அடமானத்தில் வைக்கப்பட்டுள்ள கீழ்கண்ட சொத்தினை சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் **அடையாளபூர்வ சுவாதீனத்தில்** எடுக்கப்பட்டு அந்த சொத்து **"உள்ள இடத்தில் உள்ளவாறு", "உள்ளது உள்ளவாறு" மற்றும் "எந்த நிலையில் உள்ளதோ அந்த நிலையிலேயே"** என்ற அடிப்படையில் கடன்தாரர்/ அடமானதாரரிடமிருந்து கடன் தொகை மற்றும் வட்டி, இதர செலவுகளை சேர்த்து வசூலிப்பதற்காக https://baanknet.com என்ற இணையதளம் வழியாக **விற்பனை செய்யப்படும்** என இதன்மூலம் பொதுமக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன்தார்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன்தாரர்: Mr.C.ஆறுமுகம் S/o.Mr.சிதம்பரம், **ஜாமீன்தாரர்: Mr.அமாவாசியன் சிதம்பரம், இருவரது முகவரி,** எண்.26, மாரியம்மன் கோயில் தெரு, சீதாபுரம் அஞ்சல், உத்தமநல்லூர், சீதாபுரம், காஞ்சிபுரம் - 603 301.

கோரிக்கை அறிவிப்பு தேதி: 06.01.2025/ கடன் நிலுவைத்தொகை: **19.02.2026** அன்றுள்ளபடி ₹ **56,50,375.07** மற்றும் வட்டி, கட்டணங்கள் **சுவாதீனம் அறிவிப்பு தேதி: 18.03.2025**

அடமானத்தில் உள்ள சொத்து விவரம்

சர்வே எண்கள். 175/1A, 176/1, 2A, 181/7,8, 183/1A,1B, 3,4, 184/1, 2A, 2B, 3, 4A,4B,5B & 6, பட்டா எண்.2147, தற்போது சர்வே எண். 184/1A4B, 184/21, 184/4A5B

ஷெட்யூல் A: செங்கல்பட்டு பதிவு மாவட்டம் மற்றும் அச்சரப்பாக்கம் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட DTCP அனுமதி ஆணை எண்.950/93, **மனை எண்.17, "ஜெய சக்தி நகர்", கிராம எண்.3, சோத்துப்பாக்கம் கிராமம், செங்கல்பட்டு மாவட்டம்** என்னும் முகவரியில் **1920 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம், அதனுடன் இணைந்த துணங்களும் பகுதிகளும்.** எல்லைகள்: வடக்கு: மனை எண்.01, தெற்கு: 30 அடி ரோடு, கிழக்கு: மனை எண்.16, மேற்கு: வரலஷ்மி அம்மாள் நிலம்.

குறைந்தபட்ச கேட்பு விலை	₹ **72,00,000/-**	**டேவணித்தொகை**	₹ **7,20,000/-**
ஏல உயர்வு தொகை	₹ **20,000/-**	சுவாதீனம் வகை: அடையாளபூர்வ (Symbolic)	

இ-ஏல தேதி/நேரம் 29.03.2026 காலை 11.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

EMD சமர்ப்பிக்க கடைசி நாள்/நேரம்: 29.03.2026 மாலை 3.30 மணிக்குள்

சொத்தினை பார்வையிடும் தேதி மற்றும் நேரம்: 18.03.2026 காலை 10.00 மணி முதல் 4.00 மணி வரை

மேலும் விதிகள் மற்றும் நிபந்தனைகள் விபரத்திற்கு கீழ்கண்ட இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம், இ-ஏல சேவை வழங்குனர் இணையதள முகவரி: https://baanknet.com **(அல்லது)** வங்கியின் இணையதள முகவரி: https://www.centralbankofindia.co.in

சொத்துக்களை பார்வையிட மற்றும் இதர விவரங்களுக்கு, **சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா, கிளை மேலாளர், சோத்துப்பாக்கம் கிளை,** Mob: 89399 75840 அனைத்து வேலை நாட்களிலும் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை தொடர்பு கொள்ளவும்.

SARFAESI சட்டம், 2002 விதி 8(6) / 9(1)-ன்கீழ் 30 நாள் கால அவகாச விற்பனை அறிவிப்பு

மேற்காணும் கடன்தாரர்கள்/அடமானதாரர்களுக்கும் இதன்மூலம் அறிவிப்பதாவது யாதெனில் மேற்காணும் கடன்பாக்கி மற்றும் இதர செலவுகளை இ-ஏலத்தேதிக்கு முன்னர் செலுத்தத் தவறினால் அந்த சொத்து ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டு கடன் பாக்கி வசூலிக்கப்படும். பின்னர் பாக்கி ஏதேனும் இருந்தாலும் வட்டி மற்றும் இதர செலவுகளுக்கும் தங்களிடமிருந்து வசூலிக்கப்படும்.

இடம்: சென்னை
தேதி: 19.02.2026

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
சென்ட்ரல் பாங்க் ஆஃப் இந்தியா

விடுதலைப்புலிகள் அமைப்புக்கு விதிக்கப்பட்ட

தடையை நீக்கக் கோரி வைகோ தொடர்ந்த வழக்கு தள்ளுபடி

உயர் நீதிமன்றம் உத்தரவு

சென்னை, பிப். 25: விடுதலைப்புலிகள் அமைப்பை, இந்தியாவில் தடை செய்யப்பட்ட அமைப்பாக அறிவித்த உத்தரவை எதிர்த்து கடந்த 2013ம் ஆண்டு ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ தொடர்ந்த வழக்கை தள்ளுபடி செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் அமைப்பை இந்தியாவில் தடை செய்ததை எதிர்த்து ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ 2013ம் ஆண்டு சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு, 13 ஆண்டுகளுக்கு பிறகு நீதிபதிகள் அனிதா சுமந்த் மற்றும் சுதிர் குமார் அமர்வில் நேற்று இறுதி விசாரணைக்கு வந்தது. அப்போது, ஒன்றிய அரசின் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஏ.ஆர். எல்.சுந்தரேசன் ஆஜராகி, தடை உத்தரவை உறுதி செய்வதற்கான தீர்ப்பாய விசாரணையில் தன்னை ஒரு வாதியாக சேர்க்கக் கோரி வைகோ தாக்கல் செய்த மனுவை தீர்ப்பாயம் தள்ளுபடி செய்து விட்டதால் மனுதாரர் இந்த வழக்கை தொடர முடியாது.

விசாரணை நடைமுறைகள் அனைத்தும் டெல்லியில் நடந்ததால் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர முடியாது.

புலிகள் அமைப்பின் அச்சுறுத்தல் நீடிப்பதாக கருதிய ஒன்றிய அரசு 2014ம் ஆண்டுக்கு பின்னர் 2019 மற்றும் 2024ம் ஆண்டுகளில் தடை குறித்து புதிய உத்தரவுகளை பிறப்பித்தது. அந்த உத்தரவுகளை எதிர்த்தும் வழக்கு தொடரப்படவில்லை. ஏற்கனவே காலாவதியான 2012ம் ஆண்டைய உத்தரவை எதிர்த்த வழக்கு விசாரணைக்கு உகந்ததல்ல என்று வாதிட்டார்.

மனுதாரரான வைகோ ஆஜராகி, இந்தியாவுடன் தமிழீழத்தை இணைக்க முயற்சித்ததாக குற்றம் சாட்ட எந்த ஆதாரங்களும் இல்லை என்பதால் தடை சட்டவிரோதமானது. தடையை நீக்கவேண்டும்.

இலங்கையில் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டனர். தடை விதித்து புதிய உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டாலும், பழைய உத்தரவுகளில் என்ன சொல்லப்பட்டதோ அதே தான் அடுத்தடுத்த உத்தரவுகளில் கூறப்பட்டுள்ளன என்று வாதிட்டார்.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், தற்போது 2024 அறிவிப்பு தான் அமலில் உள்ளது. காலாவதியான உத்தரவின் அடிப்படையில் தொடரப்பட்ட வழக்கு செல்லத் தக்கதல்ல எனக் கூறி வைகோ தொடர்ந்த வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.